**08.06.2023**
**OS 4/2020**
**வா.சா.1 சந்திரபிரியா**
**6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

பழனிசாமி எனது தகப்பனார் என்றால் சரிதான். அவர் மதுரை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.418/2006 என்றால் சரிதான். அந்த வழக்கு நடத்தாமல் 10.11.2009ல் தள்ளுபடியாகிவிட்டது என்றும், அதை மீண்டும் கோப்பிற்கு எடுக்க இ.ம.எண்.431/2010 தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு 28.06.2011ல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அதனடிப்படையில் மேல்முறையீடு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்தபோது எனது தகப்பனார் இறந்து, அதனடிப்படையில் நான் வாரிசுபடி சேர்ந்து அதனடிப்படையில் மேல்முறையீடு நடைபெற்றது என்றால் எனக்குத் தெரியாது. எனது தகப்பனார் இறந்து சுமார் 8 வருடமாகிறது. அந்த மேல்முறையீடு அடிப்படையில்தான் உத்தரவின் அடிப்படையில்தான் இந்த வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு அ.வ.எண்.4/2020 என்று வழக்கு நடைமுறைக்கு வந்துள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் பத்திரம் எங்கு உள்ளது என்று எனக்குத் தெரியாது. பாகப்பிரிவினை பத்திரத்தில் A-செட்டியூல் சொத்து நானம்மாளின் ஆயுள் பரியந்தம் வரை வழங்கப்பட்டுள்ளது என்பதை படித்துள்ளளேன். எனது தகப்பனார் உயிருடன் உள்ளது பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் யாரிடம் உள்ளது என்பதை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் மேற்படி நானம்மாள் ரேகை வைத்துள்ளார். ரீசர்வே எண்.13/1ற்கான 44 செண்டிற்கான நான்குமால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்திலும் ரீசர்வே எண்.13/1ற்கான 44 செண்டிற்கான நான்குமால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் உதயகுமாருக்கும் 11 செண்ட் பங்கு உள்ளது. அவரிடம் இந்த கிரைய பத்திரத்தில் கையெழுத்து வாங்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் 44 செண்ட் காட்டப்பட்டுள்ளது, அந்த சொத்தின் ஒரு பாகஸ்தரான உதயகுமாருக்கு 11 செண்ட் உள்ளது என்று சொல்லியுள்ள நிலையில் வழக்கில் 33 செண்டிற்கு பாகம் கோரியுள்ள நிலையில் வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் 4ல் 3 பங்கு 33 செண்ட் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 படி எனது தகப்பனார் 44 செண்டிற்குத்தான் கிரையத் தொகை கொடுத்ததாகத்தான்

காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் 44 செண்ட் கிரையம் வாங்கியதாக கண்டிருந்தாலும் கூட அது உதயகுமாருக்கு பாத்தியப்பட்ட 11 செண்டையோ, மேலும் 6ம்-பிரதிவாதிக்கு உதயகுமார் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தையோ கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.4 சுவாதீன ஒத்தி பத்திர சொத்து விவரத்தில் 33 செண்ட் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் பெருநான்குமால் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பில் சொத்து விவரத்தில் 44 செண்ட் என்று காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பாகம் சம்மந்தமான 33 செண்ட் பற்றிய விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வழககுரையில் சொல்லியுள்ள பரிகாரங்களுக்கு சம்மந்தப்பட்ட 44 செண்டில் 33 செண்டுபோக 11 செண்ட் பிரதிவாதிகளோ அல்லது 6ம் பிரதிவாதிக்கோ பிரித்து கொடுக்கப்பட வேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்பில் விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 6ம் பிரதிவாதியால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பில் 6ம் பிரதிவாதி வாங்கிய 11 செண்டு அப்போதே தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கி தனிபட்டா வாங்கி தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் என்றால் தவறு, அது கூட்டுப்பட்டாவாகத்தான் இருந்தது. வழக்கு சொத்தை எனது தகப்பனார் கிரையம் வாங்கிய பின்னிட்டு அதன் முன் பாத்தியதஸ்ர்கள் பெயரில் இருந்த பட்டாவை அவரது பெயரில் மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டதா என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.9 முதல் 15 வரையுள்ள வரி ரசீதுகள் எவ்வாறு எனது தகப்பனார் பெயருக்கு மாற்றப்பட்டது என்ற விவரமோ, எனது தகப்பனார் தாக்கல் செய்த வழக்குரையிலோ, நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்திலேயோ இல்லை என்றால் சரிதான். இந்த வரி ரசீதுகள்தான் தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்ட வரி ரசீதுகள் என்று சொல்வதற்கு வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.16 நானம்மாள் பெயரில் டவுன் சர்வே பதிவேடு உள்ளது. வா.சா.ஆ.2 1994 முதல் வா.சா.ஆ.16 தாக்கல் செய்யும் காலமான 2005 தேதி வரை எனது தகப்பனார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.17 அரசம்மாள் பெயரிலும் கூட்டுபட்டா உள்ளதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது 23.10.2013ல் கொடுக்கப்பட்டதாக உள்ளது. வா.சா.ஆ.17 தோராய பட்டாவில் மனைவரி பட்டா எண்.1328 ஆக சொல்லப்பட்டுள்ளது. அதை விசாரணையின் போதுதான்

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.16 நானம்மாள் பெயரில் பட்டா எண்.234 காண்பிக்கப்பட்டுள்ளது ஆனால் வா.சா.ஆ. 17 -ல் தோராய பட்டாவில் மனைவரி பட்டா எண்.1328 ஆக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் எதனடிப்படையில் பட்டா மாற்றப்பட்டது என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் பாரா-15ல் 11 செண்டை கிரையம் பெற்றவுடன் வழக்கு சொத்தை பார்த்து அளந்து தாவா சொத்தின் மேற்குபுறம் அளவீடு செய்து, முறையாக பிரிக்கப்பட்டு 6ம் பிரதிவாதியிடம் 4ல் 1பங்கான 11 செண்ட் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனவே இது தெரியாமல் நான் வழக்கு நடத்தி வருகிறேன் என்றும், எனவே நான் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய நாள் முதல் அன்றைய தேதி முதல் இன்றை தேதி வரை அவர் தனிப்பட்ட முறையில் அனுபவித்து அவர் வரி செலுத்தி வருகிறார் என்றால் தெரியவில்லை. 6ம் பிரதிவாதியை அலைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 6ம் பிரதிவாதியையும் சேர்த்து வழக்கு நடத்தி வருகிறேன் என்றும், எனவே நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் 6ம் பிரதிவாதியை பொறுத்து நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் கிழக்கு பக்கம் உள்ள சொத்துதான் தாவா சொத்து என்றும், மேற்கு பக்கம் 6ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனவே இது குறித்து வழக்கு சொத்தை சரியாக அடையாளம் காட்டாததால் நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.